∴ பலவித பன்னிப் பொருட்கள்.
∴ பரிசுப் பொருட்கள்.
∴ ரெடிமேட் உடைகள்.
∴ கலர், கறுப்பு வெள்ளைப் பிலிம்கள்
யாவற்றையும் மலிவான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
கந்தடன்
எந்த வைபவத்தையும் கண்கவர்
கலர், கறுப்பு வெள்ளைப்படங்களாக
எடுத்த சகாய விலையில், அதிவிரை
வில் தருவோம்
தொடர்பு கொள்க.
கிருபா கிவ்ற் கவுஸ்
46, பெரிய கடை
யாழ்ப்பாணம்

★ மக்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 புரட்டாசி 26 ஜுல்ஹஜ் 19 இதழ் 242
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-10-79

SRI LANKA - JAFFNA CAMPUS
UNIVERSITY LIBRARY
RECEIVED
PERIODICALS
DIVISION

தேவி விலாஸ்
[வண்ணைச் செல்லக்கோவில் சந்தி]
288, காங்கேசன்துறைவீதி
யாழ்ப்பாணம்.

"அரசுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருங்கள்"

ஆயுதப்படைகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(கொழும்பு)

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசையும் மக்களையும் பாதுகாப்பது ஆயுதப்படைகளின முதல் கடமையாகும்என ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா வலியுறுத்தினார்.

பனாகொடையில் நடைபெற்ற இராணுவப்படையின் ஆண்டு விழாவில் ஜனாதிபதி பேசினார்.

மக்களுக்கும் அரசுக்கும் விசுவாசமாக ஆயுதப்படைகள் நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய ஜனாதிபதி இராணுவப் படைகள் காட்டி வரும் விசுவாசத்துக்குப்பாராட்டுத் தெரிவித்தார்.

இலங்கை இராணுவம் அமைக்கப்பட்ட 30 ஆண்டு பூர்த்தியைக் குறிக்குமுகமாகவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு. ஜயவர்த்தனா தெரிவுசெய்யப் மட்டிலப்பதைக் குறிக்குமுகமாகவும் இந்த வைபவம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கடந்த கட்டுக்கோப்பு மாநாட்டில் கலந்துகொண்ட 95 நாடுகளில் இரண்டு அல்லது மூன்று நாடுகளில் மட்டுமே ஜனநாயகம் சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய பல தலைவர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் இலங்கையில் அவ்வாறு நடைபெறுவதைவிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்."

சூதாட்டக் குகையில் பொலிஸ் முற்றுகை

49 பேர் சிக்கினர்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் சூதாட்டகுகை என்று கூறப்படும் ஒரு இடத்தை பொலிசார் சுற்றிவளைத்து ஒரு சட்டத்தரணி உட்பட 49 பேரை கைது செய்தனர்.

நீதவான் திரு ராஜநிகம் முன்னிலையில் நேற்றுக்காலை இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

விசாரணையை பார்ப்பதற்கு நீதிமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 49 பேரும் கொண்டுவரப்பட்டனர். பொலிஸார் அங்கு பணத்தையும் கைப்பற்றினதாக கூறப்படுகிறது.

நீதிபதி ஒவ்வொருவரையும் தலா 100 ரூபாபிணையில் செல்ல அனுமதித்தார்.

பொலிஸ் அதிபர் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் கூடிய பொலிஸார், பொதுமக்கள் நல்லுறவு மாநாட்டில் சூதாட்டச் சங்கம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டு அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கோரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடபிராந்தியபோக்குவரத்துச்சபையின் புதிய சேமநலத் திட்டம்

[யாழ்ப்பாணம்]

பதினைந்துநாட்களுக்கு முன்னர் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியரின் நலன்புரிச்சங்கத் திட்டத்திற்கீழ், காரைநகர் டிப்போவில் நேர பொறுப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற இராமலிங்கம் எனும் ஊழியர் ஆயிரம் ரூபா பெறுகிறார்.

இம்மாதம் 21ம் தேதி காலை யாழ் மத்திய பஸ் நிலையத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகரா தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் மேற்படி நிதிவழங்கப்படும்.

இக்கூட்டத்தில் யாழ் எம்.பி திரு. வி யோகேஸ்வரன், யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இப்புதிய சேமநலத்திட்டம் சம்பந்தமாக வடபிராந்திய போக்குவரத்துச்சபை விடுத்துள்ள சுற்றறிக்கையில் கடிதத்தில் உத்தேச சேமநலத் திட்டமும் அதனோடு தொடர்புடைய இதர விடயங்களும் தலைவர், உரிமைபகுதித் தலைவர்கள், ஊழியர்களின் மூன்று வேறு பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய முகாமைக் குழுவினால் நிர்வகிக்கப்படும் என்றும் இவ்விடயங்கள் சட்ட அமைப்பு விதிகளில் ஒன்றிணைக்கப்படும் என்றும் இத்திட்டம் பரஸ்பரம் ஊழியர்களுக்கு நன்மையும் பலனும் விளைக்குமாறு வரவு ஊழியர்களினதும், பிரதேச சபையினதும் நலனை முன்னிட்டு ஒவ்வொரு ஊழியரும் இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேரவேண்டுமென்பது தலைவரின் வேண்டுகோளாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

இன்று ஆரம்பமாகிறது

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால், மாவட்டரீதியாக நடத்தப்பட்டுவரும் உதைப்பந்தாட்டப் பயிற்சியாளருக்கான பயிற்சி முகாம் இன்று யாழ் மாவட்டத்தில் ஆரம்பமாகின்றது. யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தில் இதரவுடன் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில்

(6ம் பக்கம் பார்க்க)

19 ஆண்டுகளுக்குப் பின்

இன்று பிடல் காஸ்ட்ரோ ஐ. நா.வில் பேசுகிறார்

[நியூயோர்க்]

கியூபா அதிபர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ 19 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று ஐ. நா. மகா சபையில் உரை நிகழ்த்துகிறார்.

ஜோன் எப். கென்னடி விமான நிலையத்தில் வந்திறங்கிய டாக்டர் காஸ்ட்ரோவுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

சுங்க அதிகாரிகள் அவரை 20 நிமிட நேரம் விமான நிலையத்தில் காத்திருக்க வைத்தனர். அவர் கொதிப்படைந்து பொறுமையிழந்து காணப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

கடைசியாக 1960ம் ஆண்டு ஐ. நா. மகாசபையில் நாலரை மணித்தியாலங்கள்வரை உரை நிகழ்த்திய சாதனை ஒன்றை அவர் ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஐ நா. மகாசபையில் அவர் உரைநிகழ்த்துகையில் அவரது எதிர்ப்புக் கோஷ்டியினர் சபைக்கு வெளியே ஆர்ப்பாட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இதன்காரணமாக சபைக்கு வெளியே பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இவரது விஜயத்தை அடுத்து 260 கியூபா பிரஜைகளுக்கு அமெரிக்கா வர 'விசா' வழங்க பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ நா வில் கியூபாவின் 80 பேர் கொண்ட பிரதிநிதிகள் கோஷ்டி ஒன்று இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. (இ)

250 மைல்கள் ஓசிப்பயணம்

(சங்கானை)

ராக்கியில் சுற்றுலா செல்ல நபர் ஒருவர் ராக்கிக்கான வாடகைப்பணம் செலுத்தாமலே தலைமறைவாகிய சம்பவம் ஒன்று அண்மையில் சங்கானையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு ராக்கி ஒன்றை அமர்த்திய ஒரு நபர் பருத்தித்துறை வல்வெட்டித்துறை, காரைநகர் போன்ற இடங்களுக்கு சுமார் 250 மைல்கள் சென்று இறுதியில் சங்கானை தேவாலய வீதிக்கு வந்த அங்குள்ள கிறிய ஒழுங்கையில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்திவிட்டு ஒருவீட்டின் படலை வழியாக உட்

(6ம் பக்கம் பார்க்க)

இளம் மாணவர்களின் துணிச்சல்மிக்க சாதனை

[யாழ்ப்பாணம்]

பேய் பிரசுகளின் உறைவிடமெனக் கருதப்படும் மயானத்தில் இளம் மாணவர்கள் கோஷ்டியொன்று ஒரு நாள் முழுவதையும் கழித்து சாதனைபுரிந்துள்ளனர்.

காரைநகர் யாழ் நகரக் கல்லூரி துணிவினைச் சவுக்கத்தைச் சேர்ந்த ஒன்பது விஞ்ஞான உயர்தர முதலாம் வருடவகுப்பு மாணவர்களே கடந்த இந்தத் துணிச்சலிக்- காரியத்தைப் புரிந்தவர்கள் கடந்த மாதம் 29ம் திகதி இவர்கள் இரவு முழுவதையும் சாம்பலோடை மயானத்தில் கழித்தனர் மயானம் பேய், பிசாசுகளின் உறைவிடம் என்ற பொதுமக்களிடையே நிலவும் தவறான எண்ணங்களையும், மூடநம்பிக்கையையும் நீக்குமுகமாகவே இவ்விளைஞர்கள் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டனர் இம்மாணவர்களின் இத்துணிவினையைக் கல்லூரி அதிபரும், ஆசிரியரும், பொதுமக்களும் வெகுவாகப்பாராட்டினர்.

விசேட கூட்டம்

(உணவு முத்திரை விடயமாக)

சால உத்தரவுபெற்ற வியாபாரிகட்கும்
13-10-79 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு
இடம்: 53, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தவறாது சமுகம் தருக.
வை. பி. முத்துக்குமாரன் சமுகம் தருவார்.

சு. சதாசிவம்,
செயலாளர்.

3819 உத்தரவுபெற்ற வியாபாரிகள் சங்கம்.

வரி விளம்பரம்

தேவை

யாழ் நகரிலுள்ள அலுமினியம் தொழிற்சாலைக்குக் கீழ்க் காணும்பணியாட்கள் தேவை. பொலிஷர்கள், எமறி அடிப்பவர்கள் அனுபவமுடையோர் கீழ்க்காணும் விலாசத்திற்குச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். உரிமையாளர், மொகிடீன் இண்டஸ்றீஸ், 70, கோவில் லேன், A. P லேன், சோனகதெரு, யாழ்ப்பாணம்.

3777

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான விளம்பனமொன்றிற்கு கவுண்டர்கிளாக்ஸ் தேவை. மின்சார உபகரணங்கள் பற்றிய அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. முடிவு திகதி 19-10-79 விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3807, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3807

விற்பனைக்கு

34 ஸ்ரீ A/60 வான் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க. பாலா எம். கனகலிங்கம், பரமர் யசோதா ஸ்ரோர், கந்தப்பசெட்டி லேன், (சாந்தி தியேட்டர் அருகாமை), யாழ்ப்பாணம்.

3801

விற்பனைக்கு

நல்லூர் வடக்கு புதுச்செம்மணி வீதியில் மரக்கறலை ஒன்று நகரக்கூரையுடன் உடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: திருமதி அன்னம்மா சபாரத்தினம், புதுச்செம்மணி வீதி, நல்லூர் வடக்கு. 3818

13-10-79 புரட்டாதி கடைசி சனிக்கிழமை அன்று வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோவில் வீதியில் மிகவைற தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் பொஸ்தகத்தின் பாகுபடுத்தல் வழிபாடு என்ற பிரசுரமும் மிக்கவைற பிரசுரங்களும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். மிக்கவைற தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்கவைற, யாழ்ப்பாணம். 3809

கிங்ஸ்லிபூர் பாரிஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்திற்கு மருந்து விற்பனை உதவியாளர்கள் தேவை. உடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். மூன்று மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது 3780

ஆசிரியர் தேவை

ஜி. சி. ச. உயர்தரவகுப்புவரை கற்பிப்பதற்கு இரசாயனவியல், பௌதிகவியல், பட்டதாரிகள் உடனடியாகத் தேவை; 20-10-79க்கு முன்னர் நேரில் விண்ணப்பிக்கவும்;

அதிபர்,
3823 யா/சோத்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கம்
(யாழ். மாவட்ட சபை)

வருடாந்தப் பொதுக்கூட்டம்

யா/பாரதி பாஷிய வித்தியாலயம்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
21-10-79 ஞாயிறு காலை 9 மணி

சிறப்புரை:
திரு. எல். ஆரியவன்சா
உறுப்பினர் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

வ. கிருஷ்ணபிள்ளை, தலைவர். (3821)
எம். குமாரசாமி, கௌரவ செயலாளர்.

முக்கிய அறிவித்தல்

க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் (5) ஐந்து பாடங்களில் சாதாரண சித்தி பெற்றோரிடமிருந்து யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள சட்டம், கலை, வர்த்தகம் ஆகிய பாடநெறிகளைப் பயில்வதற்கான பயிற்சி நெறியை பயில்வதற்கு இப்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை 18-10-79க்கு முன்பாக நேரில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தேசிய கல்வி நிறுவனம்,
11, மொம்சாக் கட்டிடம்,
ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்
3816

அந்தியேட்டி அறிவித்தல்
திருமதி பொ. சின்னத்தங்கம்

காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவி திருமதி சின்னத்தங்கம் 10-9-79-ந் திகதி யாழ்ப்பாணத்தில் காலமானார். இவர் திருமதி நாகரத்தினம், இராமநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும் பூபாலசிங்கத்தின் மாமியாரும், நிர்மலானந்தன் சின்னராசா), சண்முகநாதன் (குஞ்சு), கிருஷ்ணானந்தன்(கிளி), ரகுநாதன் (முருகன்), சதா ஆகியோரின் பேத்தியுமாவார். கல்லூரி ஆதரவாளர்களாக அந்தியேட்டிக்கிரியைகள் 10-10-79-ந் திகதி காலையில் கல்லூரி மைதானத்தினுள் நடாத்தப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்குமான அன்புடன் அறியத்தருகிறேன்.

ஆர். பூபாலசிங்கம்.

48/5, பிரான்சிஸ் வீதி,
யாழ்ப்பாணம். 3806

தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் குண்டில(Furnace)டமை யாற்ற ஜி. சி. ச. விஞ்ஞான பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த 20 வயதுக்கு மேற்பட்ட நல்ல நடவடிக்கையுள்ள நாள்கூலி அடிப்படை தேவை. எலெக்ரிசன் அல்லது மெக்கானிக் அல்லது பொயிலர் வேலைகளில் குறைந்தது 3 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்பச்சம்பளம் சகல விசேட படிகளும் உட்பட ரூபா 275/- 20-10-79க்கு முன் விண்ணப்பிக்கவும். பெனிங்கலர கண்ணாடித் தொழிற்சாலை, 25, விரையடி வீதி, யாழ்ப்பாணம். 3820

கந்தோர்ப் பாவனைக்குப் பொருத்தமான தமிழ் தட்டச்சு இயந்திரம் உடன் தேவைப்படுகிறது. பொது முகாமையாளர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், ஊர்காவற்றுறை. 3817

வாடகைக்கு

நாவற்குழி வீதி காங்கேசன்துறை வீதி சந்திக்கு அருகாமையில் மூன்று அறைகளுடனும் கோல் குசினி உட்பட சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு. விபரங்கட்கு:- 48, [illegible] வீதி, யாழ்ப்பாணம் 3824

முதலிலேயே ஆக்கப்படும் மூற்றுண கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பளை, பிரதான வீதி, காலஞ்சென்ற வைத்திய கலாநிதி செல்வத்துரை குமாரசாமியின் எழுத்திலான மரணசாதனம் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர் மரணச்சொத்து நிர்வாகிக்க இலக்கம் T/3476

தெல்லிப்பளை, பிரதான வீதி, வைத்தியகலாநிதி செல்வத்துரை குமாரசாமி என்பவரின் பத்தாவது மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979-ம் ஆண்டு யூன் மாதம் 25-ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே மூற்றுண கட்டளை பதியப்பட்டதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1979-ம் ஆண்டு யூன் மாதம் 25-ந் நாளன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
3814 பதிவாளர்.

கேள்வி விளம்பரம்
மாட்டிறைச்சி விற்கும் உரிமை 1979

கிளிநொச்சிச் சந்தையில் 1-ம் இலக்க மாட்டிறைச்சிக் கடையில் 17-10-1979தொடக்கம் 31-12-1979 வரைக்குமட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கான கேள்விகள் எண்ணல் 16-10-1979-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

மூ. சின்னையா,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி,
1979-10-08. (3822)

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்
பரந்தன்

கூரை வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தின் களஞ்சிய கட்டிடம், முரசுமோட்டைக் கிளைக் கட்டிடங்களுக்கு அஸ்பெஸ்டஸ் சீட் கூரை வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்களை கடிதமூலமாக "கூரை வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு தங்கவர், கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு 23-10-79-ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விபரங்கட்கு வேலை நேரத்தில் சங்கப் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

09-10-79; 3808

முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் விதவரிகள் மீது தள்ளுபடியும், ஆணைப்பத்திர செலவுகள் அதிகரித்தலும்

1979-ம் ஆண்டின் 42-ம் இலக்க மாநகரசபைகள், நகரசபைகள் (திருத்தச் சட்டத்திற்கு அமைவாக ஒரு ஆண்டு ஜனவரி 31-ந் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு வீத வரியையும் செலுத்துபவர்களுக்கு ஆண்டு வீத வரியின் பத்து சத வீதம் கழிப்பனவு அனுமதிக்கப்படும் காரணங்காட்டி வீத வரியின் அக்காலாண்டின் முதல் மாதத்திற்குள் செலுத்தப்படின், காலாண்டு வீத வரியின் ஐந்து சத வீதம் கழிப்பனவு அனுமதிக்கப்படும்.

விதவரிகள் உரிய காலங்களில் கட்டணம் தவறுபவர்களிடமிருந்து அறவிடப்படும் ஆணைப்பத்திரச் செலவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வெற்றுக்காணிகள் வசிப்பிட வளவுகள் என்பனற்றின் மீது (15) பதினைந்து சத வீதமும் இவை தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் மீது (20) இருபது சத வீதமும் ஆணைப்பத்திரச் செலவு அறவிடப்படும்

இவ்விடயங்கள் 1979-ம் ஆண்டு 4-ம் காலாண்டிலிருந்து அமுல் செய்யப்படுகிறது என்பதை சகல வரி பிறப்பாளர்களினதும் கவனத்திற்கு அறியத்தருகிறேன்

க. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
9-10-79 3826

புலி விலையில் புளி!

[மல்லாரி]

பேசாலைப்பகுதியில் புளி ஒரு இறாத்தல் 16 ரூபாவாகவும், தேங்காய் 1 ரூபா 75 சதமாகவும் விற்கப்படுகிறது.

இந்த விலை உயர்வால் பாவனையாளர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் புளிக்குப் பதிலாக சொதக்காயையும் மாங்காயையும் மக்கள் இன்று உபயோகிக்கின்றார்கள்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமானந்தன் பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனமிகுதிச் சொத்தினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்.

— மரணமெய்தியவர். மரணசாதன நிர்வாகிக்க இல. T/47

இராசையா பரமானந்தன் சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்
மனுதாரர்

எதிராக

1. ப. விஜயகுமார் சண்டிலிப்பாய்வடக்கு சண்டிலிப்பாய்
2. ப. சிவகுமாரன் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்
3. ப. சுமதிகலா (பராயமற்றவர்) சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.
4. ப. வத்சலா (பராயமற்றவர்) சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.
5. ப. 4ம் பராயமற்றவர் கள் தங்கள் கூட்டு வழக்குப் பாதுகாவலராகிய
6. சபாபதி அரசரட்சகம்
7. பரமானந்தம் விஜயகுமார் அவர்கள் எல்லோரும் சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆட்எவரும் 1979ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதிவரைக்கு அந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட பின்னுறுதிக்கட்டளை ஏன் மூற்றுணதாக்கப்படலாகாது என்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்
நகர்த்தவர்

இ. சிவரத்தினம்
மனுதாரரின் சட்டத்தரணி
3786

யாழ்ப்பாணத்தில் காணி

சுண்டிக்குளி சோமசுந்தரம் அவெனியூவில் மூன்றரை பரப்பும், ஈச்சமோட்டை பிரதான வீதியில் நல்ல சற்றுடலில் மூன்றேகால் பரப்பும் விற்பனவுக்கு உண்டு.

விபரங்களுக்கு:
மனேஜர்,
எச். பி. ரி. [H. P. T.]
3, மக்கள் சந்தை (மேல்மாடி)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7698 (3811)

மக்கள் கருத்து

யாழ். மேயர் கவனிப்பாரா?

இலங்கையில் பிரதான நகரங்களில் யாழ்ப்பாணத்தை இரண்டாவது இடமாகக் கொள்ளலாம். இந்த நகரைச் சில மாதத்திற்குமுன் பொறுப்பேற்று நிர்வாகத்தை நடத்தி வரும் வேளையில் நகர முதல்வர் நகரைச் சுத்தமாக வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று அறியும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. யாழ். நகரைச் சுற்றிப் பார்வையிடலும் இலங்கையர் சரி, வெளி நாட்டு உல்லாசப் பிரயாணிகளும் சரி, யாழ். புகையிரத நிலையம் வந்து அங்கிருந்து புகையிரத நிலையத்திற்குப் பிள்புறமாக உள்ள ஸ்ரீ நாகவிநாயகர்க்குப் போகும் வீதி வழியாகத்தான் அநேகர்கள் நடந்து சென்று நகரை அடைவார்கள்.

இவ்வீதி நிலையத்திலிருந்து தொடங்கி பலாலி வீதியை (புகையிரதக்கடவை) அண்மிக்குவரை வீதியின் தப்புறமாகச் சொல்லிக் வர்ணிக்கத் தேவையில்லை. இவ்வீதியில் குடியிருப்பவர்கள் தம் வீட்டிலுள்ள குப்பை கூழங்களைக் கொண்டுவந்து வீதியில் வீசிவிட்டுப்போவதையும் அத்துடன் முள்ளுகளுள்ள குரோட்டன் தடிகள், பழைய கிடுகுகள், பேணிகள், தகரங்கள், உடைந்த போத்தல் ஒடுகள் இவைகளையும் காணலாம். அத்துடன் இவ்வீதியில் அழுக்கு நிறைந்த தண்ணீர்த் தொட்டி ஒன்றையும் காணலாம். மேலும் சில காலத்துக்கு முன்பு இவ்வீதியைச் செப்பனிட்டவர்கள் புகையிரத நிலையத்தை அண்மிக்கும் இடத்துக்குச் சமீபமாக சிறிய தூரம் கல்போட்டுத் தார் ஊற்றாமல் விட்டதனால் மழை காலத்தில் அவ்வீதியில் செல்பவர்கள் சமீபத்து செருப்புகளைக் கழற்றிக் கையில் எடுத்துத் தார் கழுவித்தான் கொஞ்சதூரம் செல்லவேண்டும். இன்னும் சொல்லப்போனால் இவ்வீதியைக் ஒரு கார் அல்லது ஒரு மாட்டுவண்டிமட்டும் போக முடியும். லொறி அல்லது பெரிய வாகனங்கள் செல்ல இயலாது. ஆனால் புகையிரத நிலையத்தை நோக்கிச் செல்லும் பிரயாணிகளோ அன்றி புகையிரத நிலையத்திலிருந்து நகரை நோக்கிச் செல்பவர்களோ இவ்வீதியில் நடந்து செல்லும்போது வாகனங்களால் ஆபத்தை எதிர் நோக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். முக்கியமாகக் கறப்போரும் இவ்வீதிவழிப்போதைக் கேனும் பாவிக்க முடியாமல் இருக்கிறார்கள் அத்துடன் இவ்வீதியில் குடியிருப்பவர்கள் வீடு கட்டுவதற்காக உபயோகிக்கும் பெரிய கற்களையும் வெகு நாட்களாக இவ்வீதியிலிருந்து அப்புறப்படுத்தாமல் போக்குவரத்துக்கு இடைஞ்சல் கொடுப்பதையும் காணலாம். எனவே இவ்விடயத்தை நகர முதல்வர் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வீதியில் முற்றாக வாகனப் போக்குவரத்தை நிறுத்தவேண்டும்.

இ. தர்மலிங்கம்.
ஸ்டான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

பள்ளிமுனையில் மீன்பிடித்துறைமுகம்

[மன்னார்]

பல முயற்சிகள் எடுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் கீழ் மன்னார் பள்ளிமுனை என்னுமிடத்தில் மீன்பிடித்துறைமுகம் ஒன்று கட்டப்பட்டுவருகிறது இத்துறைமுகம் கட்டப்பட்டதன் மன்னார் மாவட்ட மீனவர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள்;

'திருமணங்களின் பின்பு மணமுறிவு வரக்கூடாது'

பெற்றோருக்கு வண. பிதா அறிவுரை

[யாழ்ப்பாணம்]

"எவ்விதமான வெளிநெருக்குதல்களுமின்றி திருமணத்தில் இணைகின்ற இரு உள்ளங்களும் ஒன்றையொன்று முழுமையாக விரும்பி ஏற்கும் நிலையில் திருமணங்கள் நடைபெறவேண்டும் இதனைப் பெற்றோர்கள் நன்குணர்ந்து தம் பிள்ளைகளுக்குத் திருமணங்களைச் செய்துவைத்தால் மட்டுமே அத்திருமணங்கள் நிலையானதாக அமையும்"

இவ்வாறு அருட்திரு செல்வராசா அடிகள் 'கிறிஸ்தவ திருமணங்கள்' எனும்பொருள் பற்றி யாழ் புனித மரியாள் தேவாலயத்தில் ஞாயிற்று பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இரு உள்ளங்கள் உண்மையான அன்பில் இணைந்தப் பழகுவதே திருமணம் அதன் பின் அவ்விருவரும் இன்பத்திலும் துன்பத்திலும் நோயிலும் சுகத்திலும் ஒன்றாகவேற படவேண்டியவர்கள். உள்ளங்கள் இணைப்பவன் இறைவன். இதனாலேயே 'இறைவன் இணைத்ததை மனிதன் பிரித்து விடுவானாக.

இருவரும் ஒரே உடலாக இருக்கிறார்கள்' என்று சிறிது வலியுறுத்தினார் தேவனின் சந்நிதானத்திற்கு திருமணக்கோலத்தில் வரும் இருவரும் திருமணம் நிறைவேறித் திரும்பிச் செல்கையில் உள்ளத்தால் ஒருவராகச் செல்கிறார்கள். இந்த இணைப்பைப் பிரிக்க யாருக்கும் அதிகாரம் இல்லை. எனவே திருமணத்திற்குவரத் தம் பிள்ளைகளை அழைத்துவரும் பெற்றோர் தம் பிள்ளைகளின் முழு விருப்பத்துடனேயே அவர்களை இவ் விணைப்பு இணைய அனுமதிக்கவேண்டும். அதைவிடுத்து குலம் கோத்திரம் பார்த்தோ உத்தியோக சீதன உயர்வுகளைப் பார்த்தோ அல்லது வேறு ஏதேனும் தமது சுயவிருப்புகளை எதிர்பார்த்தோ பெற்றோர்கள் தம் பிள்ளைகளை திருமணபந்தத்திற்கு இணைப்பார்களாயின் இறைவன் முன்னிலையில் அவர்கள் மாபெரும் தரோகம் செய்கிறார்கள்.

எனவே இச்சிக்கல்கள் ஏற்படாது முதலே காக்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோர்களின் தலையாய கடமை"

(கி-ஆ)

"பஸ் வண்டிகளையே நம்பிவாழும்

பிரயாணிகளுக்கு சிறந்த சேவையளிக்கவேண்டும்"

[கிளிநொச்சி]

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் பஸ்வண்டிகளையே தமது போக்குவரத்து சாதனமாக பயன்படுத்துகிறார்கள். எனவே பஸ் வண்டிகளையே நம்பி பிரயாணம்செய்யும் விவசாயப் பெருமக்களுக்கு நல்ல பஸ்சேவையை அளிக்க தரமான பஸ்வண்டிகளை கூடுதலாக சேவையில் ஈடுபடுத்த வேண்டும்"

கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வீ. ஆனந்தசங்கரி. கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவிற்கு வருகைபுரிந்த, வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. டட்லி குணசேகராவிற்கு, டிப்போ ஊழியர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"ஊழியர்கள்காலம்செல்லும் அல்லது இணைப்பாறுக்காரத்தில் அவ்வூழியரின் குடும்பம் நிர்க்கதியாகவே பெரிதும் பாதிக்கப்படுகின்றது. ஆதலால் மனிதாபிமான கண்ணோட்டத்துடன் அவ்வூழியரின் பிள்ளைகளுக்கு தகுதிக்கேற்ப வேலை வழங்கவேண்டும்.

"கிளிநொச்சி டிப்போவிற்கு புதிய கட்டிடமும், பஸ்நிலையமும் அமைக்க என்னாலான உதவிகளைச் செய்வேன், டிப்போவிற்குரிய காணிகள் கையகப்படுத்தப்பட்டு விட்டதனால் உடனடியாக வேலைகளை ஆரம்பிக்க போக்குவரத்துச்சபை முன்வரவேண்டும். சாலை ஊழியரின் வீடில்லாப் பிரச்சினை தீர வீடமைப்பு திட்டமொன்று உருவாக்கப்படும்

திரு. டட்லி குணசேகரா தமது நன்றியுரையில் "இங்கு பணி புரியும் ஊழியர்களும் உயரதிகாரிகளும் சகோதரர்போல இணைந்து பிரயாணிகளுக்கு நல்ல சேவை செய்ய வேண்டும். மக்களுக்கு எம்மால் அளிக்கப்படும் சேவை சிறந்ததாக இருக்க மேலும் பஸ்வண்டிகள் உடனடியாகத் தேவை. மேலதிக பஸ்வண்டிகளைப் பெற தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளேன் கிளிநொச்சி சாலைக்கு மேலதிக பஸ்வண்டிகளை விரைவில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன்.

"இதுவரை காலமும் இ போ ச ஊழியர்கள் சிங்கள மொழியில் தேர்ச்சியில் காதரர் வருடாந்த பதவி உயர்வுகளைப் பெறுது கஷ்டப்பட்டார்கள், அரசாங்கத்தின் முன்னேற்றமான கொள்கையால் சிங்கள மொழி தேர்ச்சியிலிருந்து சம்பள உயர்வுக்கு விதிவிலக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

இலங்கை தேசிய ஊழியர் சங்க பிரதிநிதி திரு. எஸ். க. குணபாலபோகன், அதிபர்சட்சார் எஸ் சொக்கலிங்கம், பொறியியலாளர் கே பாலேந்திராவும் உரையாற்றினார். [நெல் நி. கு]

தேவரையாளியில் வெள்ளிவிழாவும் பரிசளிப்பும்

[புலோலி]

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி, அதன் வெள்ளிவிழாவை இம்மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை மாலை கொண்டாடவிருக்கிறது;

மேற்படி கல்லூரித் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கும் இவ் வெள்ளிவிழாவுக்கு பிரதமவிருந்தினர்களாக உடுப்பிட்டி எம் பி திரு. த இராசலிங்கமும் நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரமும், உதவி அரசாங்க அதிபர் திரு ஏ தங்கராசாவும் கலந்து கொள்வார்கள்.

வெள்ளிவிழாப் பரிசில்களை திருமதி சரஸ்வதி இராசலிங்கம் வழங்குவார்

அதிபர், ஆசிரியர், மாணவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்படவிருக்கும் இவ்விழாவிற் கான ஏற்பாடுகளும் இடம் பெறவிருக்கின்றன [ஈ]

'விவசாயத்திற்கு அரசஉதவி: வாய்ப்பை நாம் தவறவிடக்கூடாது''

-- விவசாய போதனாசிரியர்

[சங்கானை]

"அரசாங்கங்கள் மாறிமாறி ஆட்சிக்கு வந்தாலும் அவை விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து கோடிக்கணக்கான பணத்தை செலவிட்டுகுடியேற்றத்திட்டங்களை அமைத்து வசதிகளை மக்களுக்கு பகிர்ந்தளித்து வருகின்றது. இந்த நல்ல வாய்ப்பை எம்மவர்கள் தவறவிடக்கூடாது"

யாழ் மாவட்ட விவசாய போதனாசிரியர் திரு. ரி குமாரவேல் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. நா இராசா தலைமையில் நிந்தவூரில் வயிரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது. கருத்தரங்கில் திரு. குமாரவேல் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாளாந்தம் சனத்தொகை அதிகரித்தவருகிறது. ஆனால் இருபதோ ஒரே அளவிலான நிலம்தான் இதனை பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிப்பதில் யாழ்ப்பாண மக்கள் பெரும் சிரமத்திற்காளாகின்றனர் எனவேதான் வன்னிப் பகுதிகளான முளங்காவில், மன்னார் போன்ற குடியேற்றத்திட்டங்களில் குடியேற முற்பட்டுக்கொள்ள வேண்டும். அரசு சலுகைகளையும் ஆக்கிக் கொடுக்கும் கடந்தகாலங்களில் அங்கு குடியேறியவர்கள் சில கஷ்டங்களை தாங்கப் பிடித்தமையால் இன்று சீரும் சிறப்புமாகப் பெற்று வாழ்கின்றனர்.

தொல்புரம் விவசாய விஞ்ஞான நிலையப் பொறுப்பதிகாரி திரு ஏ. கிருஷ்ணர், ஆர் எவ். தர்மிநாயகம், செல்வி எல் தர்மிட்டிகள் ஆகியோரும் பேசினார்கள் [கு]

இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 26-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(12-10-1979)

மேடம்: இரக்க சிந்தை மேலிடும் பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள் பெரிய இடத்துத்தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு மேலோர் வேதாந்தவிசாரணைகளில் ஈடுபடுவார்கள் கவனியமான தினம்.

இடபம்: மனதில் விரக்தி நிலை தென்படும் உடல் நலமும் பாதிக்கப்படலாம் காரிநடைகளினால் நஷ்டமேற்படும் பூமிப்பிணக்குகளில் மூலக் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்;

மிதுனம்: சிந்தனையின் தாக்கத்தால் உங்களைச் சிந்திக்கவைக்கும் குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம் வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு அவசரமுடிவைத் தவிர்க்கவும்.

கடகம்: இன்று அனைவரும் பொருளும் இணைந்து கிடைக்கும் தொழில் புரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள் உதாசீனமும்கொடுக்கவும் மொக்று

மகாகும்பாபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீ மகா விரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சமுக விநாயகர் மகா கும்பாபிஷேகம் நவம்பர் 2-ந் திகதி நடைபெறவிருக்கிறது

பிரதிஷ்டா பிரதம குருவாக சிவஸ்ரீ வை. மு பரமசாமிக் குருக்கள் கடமையாற்றுவார்

சிறுவர் அரங்கு சீர்கேடு

(மன்னார்)

மன்னார் சிறுவர் விளையாட்டரங்கு மிகவும் சீர்கேடாக உள்ளது. இதனால் இங்கு சிறுவர்கள் விளையாடப்போவதில்லை.

மன்னார் பட்டினசபையால் கட்டப்பட்டு, மதில் கட்டி, மைபூசி வெளியில் பார்க்கும் போது அழகாகக் காட்சியளித்தபோதிலும் விளையாட்டரங்கின் உள்ளே ஒன்றுமே குழியும், குழி நிறையத் தண்ணீரும், ஆடு, மாடுகளின் எருவுமாகவே உண்டு! ஒரு ஊஞ்சல் மட்டுமே உள்ளது

இந்த விளையாட்டரங்கினைச் சீரமைத்து சிறுவர்கள் விளையாடுவதற்கு பட்டினசபை கவனம் செலுத்த ஒழுங்குகளைச் செய்யுமா என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். [கி]

கிடைக்கவாம் சிறப்பான தினம்.

சிங்கம்: மனக்கவலைகளுக்கு இடமளிக்கும் கடமையில் தடை ஏற்படும் மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள் மதுபானத்தைத் தவிர்க்கவும்

கன்னி: வாகனச் சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும் மேலிடத்து கிபார்கள் கிடைக்கும்.

துலாம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும் பண விவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும் புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விருச்சிகம்: அதிகாரத் தோரணைக்கு இடமுண்டு அபாய கரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிகவனம் செலுத்தவேண்டும் குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம் அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

தனு: சமயோசித புத்தி உங்களுக்கு தாராளமான சிந்தனைகளைத் தேடித்தரும் மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும் உள்ளத்தில் உவகை தங்கும்;

மகரம்: குறை கேட்க நேரிடும் கடமையில் தடைதோன்றும் நஷ்டத்திற்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

கும்பம்: பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள் இதன் மூலம் பணமும் செலவாகும். அரசியல் வாதிகளுக்கு இன்று அதிஷ்டதினம்.

மீனம்: இதயப்படுதாவிக் இன்பத்தின் உந்துவெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும் தொழில் துறையில்புதிய சந்திப்புகளுக்கு இடமேற்படும் தெய்வத்தின் துணையுமுண்டு.

சோதிடக்கலைஞர்
திருமலை க. வேலுப்பிள்ளை

புதிய கட்டிடம்

[நெல்லியடி]

கரவெட்டி கிழக்கு வாக்காளர் விருத்திசாலையில் 40,000 ரூபா செலவில் புதிய கட்டிடமொன்று நிறுவப்பட்டுள்ளது இக்கட்டிடத்திற்கான பண முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து உடுப்பிட்டி எம் பி திரு த இராசலிங்கத்தின் சிபார்சின் மீது ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜெயப்பிரகாஷரின் இறுதிப்பேட்டி

2 வாரங்களுக்கு முன்னரே மரணம் நெருங்கி வருவதை உணர்ந்திருந்தார்

பட்னா, அக். 11

"எனது முடிவு நெருங்கிவிட்டதென எனக்குத் தெரிகிறது. ஆனால் அது பற்றி நான் கவலைப்படவில்லை."

"அமரர் ஜெயப்பிரகாஷ் நாராயண் மரணமடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:

நான் போற்றி வளர்த்தெடுத்திய இலட்சியங்கள் எனது வாழ்நாளில் உருப்படியான உருவெடுக்காமல் போனது நான் என்னை வேதனைக்குள்ளாக்குகிறது.

காந்திஜியின் இலட்சியங்கள் பூர்த்தியடைவதைப் பார்க்கப் போதிய அவகாசம் கிடைக்கவில்லையே என்பதுமே வருத்தத்துக்குரியதாகும்.

ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களது நிலை என்னை எப்போதும் மனமுருக வைத்துள்ளது. அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முன்னர் மார்க்ஸிஸத்தை நாடினேன். ஆனால் இந்தியச் சமுதாயமான பண்புகளையும் இலட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்ட காந்தியத்தால் மட்டுமே இப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க உதவுமென்ற முடிவுக்கு வந்தேன்.

இந்தவகை சமேச்சமான சமுதாயத்தை உருவாக்க பல தடைகள் இருக்கின்றன என்பதை உணர்கிறேன். ஆனால் இத்தடைகளை நீக்குவதற்கு நாம் எல்லோரும் முயற்சி எடுக்கும் பட்சத்தில் அவை தாமாகவே நீங்கிவிடும்.

பட்னாவிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இப் பேட்டி எடுக்கப்பட்டது. (இ)

இன்று

பட்னா, அக். 11

அமரர் ஜெயப்பிரகாஷ் நாராயணின் 78வது பிறந்த நாள் இன்று இந்தியா எங்கும் கொண்டாடப்பட்டது.

அன்று ஜனதா ஆட்சியின் அவலங்கள்

இன்று மக்கள் கட்சியின் அலங்கோலங்கள்

இந்தியாவில் தேர்தல் இன்னும் சந்தேகமே!

திருமதி காந்தி கூறுகிறார்

ஸ்ரீநகர், அக். 11

திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறுமா என்பது இப்போது சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

இவ்வாறு முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திருமதி காந்தி மேலும் பேசுகையில்: தேர்தல் பற்றி திருவரங்கிலின் மக்கள் கலந்த தலைவர்கள் ஆளுக்கொருவகுத்தைக் கூறிவருகின்றனர்.

ஜனதா ஆட்சியின் அவலங்களைப் பார்த்த மக்கள் இப்போது மக்கள்கட்சியின் அலங்கோலங்களைப் பார்த்துவருகிறார்கள்.

திரு: பஹுகுணா போன்றவர்கள் ஜனதா மீதுள்ள நம்பிக்கை இழந்து விட்டார்கள். மக்கள்கட்சி மீதும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். ஜனதா வுக்கோ-மக்கள் கட்சிக்கோ எதிர்காலமில்லை என்றார். (கோ-இ)

பாகிஸ்தானில் எண்ணெய் ஆராய்ச்சி

[கராச்சி]

பாகிஸ்தானில் எண்ணெய் கண்டுபிடிப்பதற்காக, பிரிட்டிஷ் டச்சு ஷெல் கம்பெனிக்கு பாகிஸ்தான் இராணுவ அரசு, பஞ்சாப் மாகாணத்தில் 11,000 சதுரமைல் பரப்புடைய வாதி வழங்கியுள்ளது.

நாட்டுக்கு தேவையான எண்ணெயில், இருபது சதவிகிதம் மட்டுமே உள்நாட்டிலிருந்து கிடைக்கிறது; மிகுதி இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்காக நாட்டின் இறக்குமதி செலவில் மூன்றிலொரு பகுதி எண்ணெய் இறக்குமதிக்குச் செலவாகிறது.

புதிய எண்ணெய்வள ஆராய்ச்சி ஏற்பாடு குறித்து "முஸ்லிம் நாளேடு" எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில், விதேசிய கம்பெனிகள் எண்ணெய்வள ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்படுவதைக் தேசியச் செல்வம் சூறையாடப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும், இந்த ஏற்பாட்டினால் பாகிஸ்தான் மக்களோ அல்லது பாகிஸ்தானோ அடையப்போவது ஒன்றுமில்லையென்றும் எச்சரித்துள்ளது.

நாளை 52 கலப்புத் திருமணங்கள்

சென்னை, அக். 11

காந்தி ஜெயந்தி கொண்டாட்டங்களை ஒட்டி தமிழ்நாடுடன் 52 கலப்புத்திருமணங்களை தமிழ்நாடு கவர்னர் திரு பிரபுதாஸ் பட்வாரி செய்துவைக்க தீர்மானித்துள்ளார் என தமிழக செய்தி ஒன்று கூறுகிறது. (இ)

இவ்வாண்டு தித்திக்கும் தீபாவளி பண்டிகைக்கான சிறந்த ஜவுளித் தெரிவுகளுக்கு அழைக்கிறது...

யாழ்நகரில் புதிய நிறுவனம்....

மயூரா சென்டர்

மயூரா சின்டிக்கேற் உற்பத்திப் பொருட்களும்;
"ஹிங்" காமென்ஸ் றெடிமேட் தயாரிப்புக்களும்,

இதோ

★ சாறிவகைகள்
- வூலி சாறிஸ்
- 44 சாறிஸ்
- சற்றின் கிறேப் சாறிஸ்
- ரெறின் சாறிஸ்
- பிரின்டெட் காஞ்சிபுரம்
- (F)புல்வொயில் சாறிஸ்
- J B. நைலெக்ஸ்

★ றெடிமேட் ஆடைகள்
- ஜில் பெல்ஸ் (GILL)
- டெனிம் ஜீன்ஸ் (DENIM)
- மயூரா பெல்ஸ் (MAYURA)
- லேடிஸ் பெல்ஸ்
- ரான்கிலர் சேட்
- பிளீட்டட் ஸ்கேட்ஸ்
- சேட்வகைகள்

★ சிறுவர் ஆடைகள்
- ஜில் பெல்ஸ்
- பிளீட்டெட் புறெக்ஸ்
- மக்ஸி புறெக்ஸ்
- T. சேட்ஸ்
- மியூசிக் சூட்ஸ்
- சோட்ஸ்
- சேட்வகைகள்

அனைத்திற்கும் யாழ்நகரில் புதிய நிறுவனம்

மயூரா சென்டர்

13[B] நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7556.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
தினசரி 3 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த்-ஜெயலலிதா
வெண்ணிற ஆடை

லிடோ யாழ். நகர்
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
இன்று முதல் 18-10-79வரை
சிவாஜி- சரோஜாதேவி நடித்த
ஆலயமணி

REGAL (Jaffna)
Daily at 2-00 4-30 7-00 & 9-30 p.m. only
FOR PETE'S SAKE

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - பத்மினி நடித்த
அரசிளங்குமரி
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45 7-00, & 9-30 p.m.
JOE DON BAKER in
"WALKING TALL" Action Packed Color Movie
Coming Soon! Rajesh Kanna "ZANJEER" Hindi Color

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
உதயகுமார் - சரோஜாதேவி வீரப்பா நடித்த
யானைப்பாகன்
(புதிய பிரதி)
From 13-10-79
Operation Day Break
(Color)

தராக்கி மரணம்!

காபூல், அக் 10

ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் நூர் முகம்மது தராக்கி சுகயீனம் காரணமாக காலமானார் என்று காபூல் வானொலி அறிவித்தது.

நீண்டநாட்களாகச் சுகயீனமுற்றஜெனரல் தராக்கி நீண்ட நாட்களாக படுக்கையில் இருந்தார் என்றும் நிர்வாகத்தை கவனிக்க முடியாதநிலையில் இருந்தார் என்றும் புதிய அதிபர் ஜெனரல் ஹபீஸ்உல்லா கமீன் கூறினார்

ஜெனரல் தராக்கியின் பூதவுடல் தேற்று அவரது குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்றும் ஜெனரல் கமீன் தெரிவித்தார்

கடந்த மாதம் நடுப்பகுதியில் ஆப்கானிஸ்தானில் புரட்சிச்சதி மூலம் ஜெனரல் தராக்கி பதவியிலிருந்து இறக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் பின்னர் அவர் உயிருடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே (இ)

RIO Jaffna Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m
One Chance In A Thousand
(Spy-Thriller)

தாகம்ஸ் (கல்லூரி)
தினசரி 4-45, 7-00 & 9-45
Percy's Progress

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா மூவிஸ்சாரின்
அந்தமான் காதலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்நகர்)
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கவேண்டியிருப்பதால் காட்சிநேரங்கள்குறிப்பிடமுடியாமைக்கு மன்னிக்கவும்.
நடிகர் திலகம் ★ சிவாஜி கணேசன் ★ நடிப்புச்செல்வி சுஜாதா
அறிமுகம் விஜயகுமார், சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா, ராமதாஸ், மனோரமா, சுந்தரராஜன், சுருளிராஜன், சச்சு இன்னும் பலர் நடித்திருக்கிறார்கள்.
இசை: இளையராஜா வெள்ளிவிழாச் சித்திரம்
தீபம்
[வர்ணக் கலர்]

திமுக இ.காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக

சகலகட்சிகளுடனும்கூட்டணி அமைக்க எனதுகட்சி தயார்

நெடுமாறன் அறிவிப்பு

சென்னை, அக் 11

தி.மு.க-இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக ஏனைய தேசிய, பிராந்தியக்கட்சிகளுடனும் தேர்தல் உடன்பாடு செய்துகொள்ள தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தயாராக உள்ளதென்று அதன் தலைவர் திரு பி. நெடுமாறன் கூறியுள்ளார்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்கட்சியின் புதிய கமிட்டிக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதென்றும் அவர் கூறினார்.

தி.மு.க.வுடனும் இந்திரா காங்கிரஸுடனுமிடையே ஏற்பட்டுள்ள தேர்தல் உடன்பாடு முறையற்றது. இந்த உடன்பாட்டினால் இந்திராகாங்கிரசுக்கு மேலும் இழிவு ஏற்படுமென்றும் அவர் கூறினார். (இ)

செவ்விந்தியப்பெண்களுக்கு விருப்பமின்றி கருத்தடை

அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

அரிஸ்டாடாம், அக் 11

அமெரிக்காவில் உள்ள செவ்விந்திய பெண்களுக்கு அவர்களின் அனுமதியின்றியே அமெரிக்க அரசு கருத்தடை செய்துவருகிறது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செவ்விந்தியர்களின் பெண்கள் சமீபத்தில் தலைவர்களில் ஒருவரான திருமதி லினோனா டியூக் இவ்வாறு நெதர்லாந்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

செவ்விந்தியர்களின் ஜனத்தொகையைக்குறைக்கும் நடவடிக்கையாகவே அமெரிக்க அரசு இதைச் செய்துவருகிறது என்றும் அவர் கூறினார்

செவ்விந்தியர்களில் அநேகர் புற்றுநோய், இரத்தச்சோகை, மலட்டுத்தன்மை ஆகிய நோய்களினால் பாதிக்கப்படுவதாகின்றனர். இதற்குக்காரணம் யுரேனியம் சுரங்கங்களில் பணிபுரிவும், இவர்கள் காரத்திலிருக்கின்ற கழிவுகளினால் பாதிக்கப்படுவதே ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

[illegible]றிமாண்ட்

(சங்கானை)

தோய்ந்து உலர்போட்ட சேட்டுக்களை களவடி அதனை ஏமாற்றி சென்றதாகக் கூறப்படும் நபர்கள் இருவரை ஆனைக்கோட்டை பொலிசார் கைது செய்தனர்.

இளிநொச்சியைச் சேர்ந்த மொகமது அலி, சாவகச்சேரியைச் சேர்ந்த மகாலிங்கம் யோகராசா ஆகிய இருவருமே கைதானவர்களாவர்.

சம்பவதினம் கொக்குவிலைச் சேர்ந்த முரளிதரன் தமது சேட்டுக்களை தோய்த்து வீட்டுப் புறத்தில் காயப்போட்டிருந்தபோது சந்தேக நபர்கள் இருவரும் அவற்றைக் களவடிச் சென்றனராம். விசாரணையிலீடுபட்ட ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜண்ட் டிலீபன் தலைமையிலான பொலிஸ் காவல்படையினர் சந்தேக நபர்களை மேற்படி சேட்டுக்களை ஏமாற்றிக்கொண்டு செல்லுகையில் வழியில் வைத்து கைது செய்தனர் யாழ் நீதிமன்றத்தில் இருவரும் ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தை அவர்கள் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இம்மாதம் 16ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென். பற்றிக்ஸ் கொழும்புடன் மோதுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், கொழும்பு செல்வச்சன்னிதி கல்லூரிக்குமிடையில், நாளை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கிரிகெற்போட்டியான உதைபந்தாட்ட மோதல் நடைபெறவுள்ளது.

கட்டாக்காலிகள் தொல்லை

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது

பிரயாணிகள் தமதுபொருட்களைக் கீழே வைத்துவிட்டு மறுபக்கம் திரும்பினால் போதும். பொருட்களை கட்டாக்காலி மாடுகள் நாசமாக்கிவிடுகின்றன பிரயாணிகள் இதனால் மிகவும் அசௌகரியமடைகின்றனர் (அ)

ஊரெழுவில் சுயஉதவி வீடமைப்புத்திட்டம்

(ஊரெழு)

சோப்பாய் தொகுதியில் சுயஉதவிமூலம் வீடுகளை அமைப்பதற்கான இடமாக ஊரெழு கிராமத்திலுள்ள பொக்கணை என்ற இடம்தெரிவு செய்யப்பட்டுள்ளது. சோப்பாய் தொகுதிப்பொறுப்பாளரான உதயபிள்ளை திரு சி. சிறீரவேலுப்பிள்ளையால் பிரேரிக்கப்பட்டிருக்கும் 40 பேருக்கு மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு சுயமுயற்சிமூலம் வீடுகளை அமைப்பதற்கான கட்டிடப் பொருட்கள் விரைவில் வழங்கப்படுமென்று ஊரெழு கிராமசேவை அலுவலர் திரு த. கிருஷ்ணராசா தெரிவித்தார்.

மாநாடு

(யாழ்ப்பாணம்)

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாடு இன்று காலை 21ம் திகதி காலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

திரு எஸ். நி. எம் நாகரத்தினம் தலைமையில் இம்மாநாடு நடைபெறவிருக்கிறது. (அ)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி,ஞாயிறு 2-30
சிவாஜி - கஞ்சுளா
எங்கள் தங்கராசா

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 10-30, மி.ப.2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்-விஜயலக்ஷ்மி நடித்த
வல்லவன் ஒருவன்
(புதிய பிரதி)

இன்று

[யாழ்ப்பாணம்]

அருள்மிகு செந்தில் எதிர் வேலாயுத சுவாமி கோயிலில் இன்று மாலை ஆறு மணிக்கு விசேட பூஜாதனைகளும், அதனைத் தொடர்ந்து சுப்பிரமணிய சாந்திநிலையின் சொற்பொழிவும் நடைபெறும். (கோ)

டிராக்டர் திடீர் மறைவு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒன்றரை டன்சக்தி பெறுமதியான டிராக்டர் ஒன்று திடீரென காணாமல் போய் விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிஸார் இதுபற்றி விசாரணைசெய்துவருகிறார்கள். (கோ)

இன்று கூடும்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு அபிவிருத்திக்குழு கூட்டம் இன்று காலை மட்டக்களப்பில் நடைபெறுகிறது.

நீதி அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை, மாவட்ட அமைச்சர் திரு. கே. கனகரட்ணம் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள். [கு]

உயருகிறது

[மன்னார்]

பேசாலையிலுள்ள சில கிராம அலகுரிப்பு நிலையங்களின் முச்சக்கரவண்டிக்கு 1 ரூபா 50 சதமும், முடிவெட்டுவதற்கு 3ரூபா 50சதமும் அறவிடுகிறார்கள்.

250 மைல்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புகுந்து தலைமறைவாகிவிட்டாராம்.

இதுபற்றி சங்கானைப்பொலிசார் கீச்சோ அகரன் எனும் வாலிபரை சந்தேகத்தின்மீது தேடிவருகின்றனர். [கு]

உதைபந்தாட்ட...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த பயிற்சி முகாம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

இப்பயிற்சி முகாமை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன, உதை பந்தாட்ட பயிற்சியாளர் கி. ச. ஜெயவாதிதனு இலங்கை உதைபந்தாட்ட மத்திய ஸ்தான சங்க காரியதரிசி திரு. வி. கே. குருமுகம் ஆகியோர் நடத்துகின்றனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து மொத்தம் முப்பது பேர் இந்த பயிற்சி முகாமில் கலந்துகொள்கின்றார்கள்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப்புடன், காரியதரிசி திரு ஈ. கே குமரையாவும் பயிற்சி முகாமுக்குத் தேவையான சில ஏற்பாடுகளையும் செய்துள்ளனர்.

நினைவில் நீங்காதவர்

முத்தையா அண்ணன் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த பாவிலு முத்தையா செபஸ்ரியாம்பிள்ளை மறைந்து இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகின்றது. வாழுகையை மனமுரோதாதபடி நடக்கும் நல்ல பண்பாளரான இவர், சாந்தம், தெய்வபக்தி எனும் நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்து பலரது உள்ளங்களில் நீங்கா நினைவாகி நிற்கிறார்.

பகிர்ந்து வாழ்தல் குற்றம் குறைகளை மறந்து மன்னித்து வாழ்தல் எனும் கிறிஸ்தவ கோட்பாட்டினை இவரது வாழ்வு நன்கு பிரதிபலித்தது எனலாம் புனித யுவாவியார் ஆலயத்தில் எல்லோருடன் பல ஆண்டுகள் மரியாயின் சேனையாளராகத் திகழ்ந்த இவர் சேவையிலும் செபத்திலும் பரிசுத்த கன்னிமரியாளின் உண்மைப்பக்தனாக விளங்கி தொண்டாற்றி வந்தார்.

"இயற்பெயர் இவ் வாழ்க்கை வாழ்பவன் எப்பாவி- முயன்றாலும் எல்லாம் தவ" எனும் குறளோவியமாக நிற்கும் பாவிலு முத்தையா செபஸ்ரியாம்பிள்ளை இவ்வுலகில் கிறிஸ்துவின் சாயலைத்தாங்கி வாழ்ந்தது போலவே மறுஉலகிலும் கிறிஸ்துவிலும் பரிசுத்த கன்னி மரியிலும் ஒன்றித்து பேரின்பம் துய்க்கப் பிரார்த்திப்போம்.

...ஓர் அன்பன்

மக்கினென் டிரவல்சேவிஸ்
(இலங்கை) லிமிட்டெட்

Mckinnon ravel Service
(Ceylon) Ltd

தங்களது இனிய ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கிவருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சற்றுலாக்கள்
- பாஸ்போர்ட்

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்
உங்கள் பிரயாண ஒழுங்குகளை
மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்,
தபால்பெட்டி எண்: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

1ம்வருட நினைவாஞ்சலி

பாவிலு முத்தையா
செபஸ்ரியாம்பிள்ளை
தோற்றம்: 19-11-1906
மறைவு: 12-10-78
அன்புடன் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

3831

மகத்தான தீபாவளிப் பண்டிகைக்கு
மறக்கமுடியாத ஜவுளி வகைகள்!

உங்கள் மனதை விட்டகலாத அபிமானத்துக்குரிய
"ராஜ்கோபால்ஸ்" ஸ்தாபனத்தாரின்

மயூரா சின்டிக்கேற் உற்பத்திப் பொருட்களும்
"ஹிங்" காமென்ஸ் றெடிமேட் தயாரிப்புகளும்

இதோ

★சாறி வகைகள்
- வூலி சாறிஸ்
- G 44 சாறிஸ்
- சற்றின் கிறேப் சாறிஸ்
- ரெறின் சாறிஸ்
- பிரிண்டெட் காஞ்சிபுரம்
- (F)புல் வொயில் சாறிஸ்

★றெடிமேட் ஆடைகள்
- ஜில் பெல்ஸ் (GILL)
- டெனிம் ஜீன்ஸ் (DENIM)
- மயூரா பெல்ஸ் (MAYURA)
- லேடீஸ் பெல்ஸ்
- ரான்கிளர் சேட்
- பிளீட்டெட் ஸ்கேட்ஸ்
- சேட்ஸ் வகைகள்

★சிறுவர்உடைகள்
- ஜில்பெல்ஸ்
- பிளீற்றெட் புறொக்ஸ்
- மக்ஸி புறொக்ஸ்
- T சேட்ஸ்
- மியூஸிக் சூட்ஸ்
- சோட்ஸ்
- சேட்ஸ் வகைகள்

இன்னும் கண்கவர் வர்ண இம்போட்டட் ஜவுளி ரகங்கள் அனைத்திற்கும்

ராஜ்கோபால்ஸ்

"ஹிங்" காமன்ஸ் தயாரிப்புக்களின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்கள்

47, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7168 --- 7525

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வைரவர்கோவில் சேர்வுவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Reg No GN/3945/78 The Eelanadu P O Box 49 Pungudutivu Eelanadu
T. Phone 889